12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியது</u>

# <u>மண்ணுக்கும் விண்ணுக்கும் போர்</u>

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
**(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)**

மெய்யான இந்துமத ஆண்டு <u>43,73,120</u> **பங்குனி** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1) சித்தர்களின் ஏட்டில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி பற்றியுள்ள குறிப்பு.

2) "மண்ணுக்கும் விண்ணுக்கும் போர்" - அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதான அருட்பட்டத்தைப் பத்திக்கும், சத்திக்கும், சித்திக்கும், முத்திக்கும், நடைமுறை வாழ்வுக்கும் உரியதாக்கும் முயற்சி பயிற்சி பற்றிய அறிக்கை.

3) 25.6.1983இல் குருதேவர் அவர்கள், அருள்மிகு சித்தரடியான் பெ.சங்கிலியாபிள்ளை, (திருச்சி) அவர்கள் சமூகத்துக்கு விடுக்கும் 'செயல்விளக்கத் திருவோலை'.

4) 10.8.1983இல் குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சல்.

---

## நமது தவம்

'தமிழனுக்குத் தமிழே கடவுள், தெய்வம், தேவதை, இறை, எல்லா என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்';

'தமிழனுக்குத் தமிழ்மொழியே அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழி என்ற பேருண்மையைப் புரியும்படிச் செய்வதே சிறந்த தவம்';

'தமிழனுக்குத் தமிழ்மொழிதான் அருளை அநுபவப் பொருளாக ஊற்றெடுக்கச் செய்யும் அமுதமொழி என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்'.

**[குருதேவர், ஞானாச்சாரியார், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக்களில் இருந்து எடுக்கப்பட்டது.]**

# <u>சித்தர்களின் ஏட்டில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி பற்றியுள்ள குறிப்பு</u>

“.... பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி **‘குருநிலை பதினெட்டு எட்டினூர்***’ [* *‘எட்டினூர்’* என்ற சொல் சில ஏடுகளில் *‘கிட்டினூர்’* என்ற பாடவேறுபாடு பெற்றுள்ளது.] என்ற நிலையையும், **‘திருவோலக்க நிலை முப்பதும் பெற்றூர்***’ [* *‘பெற்றூர்’* என்ற சொல் சில ஏடுகளில் *‘உற்றூர்’* என்ற பாடவேறுபாடு பெற்றுள்ளது.] என்ற நிலையையும் **<u>எய்துதல் வேண்டும்</u>** ....” என்ற குறிப்பு குருபாரம்பரியத்திலும், பூசாவிதி, பூசாநெறி, பூசாமுறை, குருமார் ஒழுக்கம், சூத்திறம், சூத்திரம், சூத்தரம் ... முதலிய பல சித்தர் நூல்களிலும் காணப்படுகின்றது.

## <u>குருநிலை பதினெட்டு</u>

**[1]தேவ குரு, [2]வேத குரு, [3]ஓத குரு, [4]குருதேவர்,**
**[5]நாத குரு, [6]போத குரு, [7]வாத குரு, [8]மோத குரு,**
**[9]சுர குரு, [10]அசுர குரு, [11]அமர குரு, [12]வான குரு,**
**[13]கண குரு, [14]முனிவ குரு, [15]இருடி குரு, [16]அருவுருவ குரு,**
**[17]ஞால குரு, [18]ஞான குரு.**

# திருவோலக்க நிலை முப்பது:

**[1]பத்திஆழி, [2]சத்திஆழி, [3]சித்திஆழி, [4]முத்திஆழி,**
**[5]அமரத்தரு, [6]இறைமைத்தரு, [7]இருடித்தரு, [8]தெய்வீகத்தரு,**
**[9]தவத்திரு, [10]மறைத்திரு, [11]மந்திறத்திரு, [12]வேள்வித்திரு,**
**[13]தாந்தரீகமூர்த்தி, [14]ஞானமூர்த்தி, [15]மந்தரமூர்த்தி, [16]வேதமூர்த்தி,**
**[17]நான்மறைவித்து, [18]நான்முறைவித்து, [19]நானெறிவித்து, [20]நான்வேதவித்து,**
**[21]ஆத்தாள் அமளிகை, [22]கொற்றவை இருக்கை, [23]பராசத்தி திருவடி,**
**[24]அரசயோகி, [25]இராசிவட்ட நிறைவுடையார்,**
**[26]நல்லிலக்கண மார்புடையார்,**
**[27]நூற்றெட்டுத் திருப்பதிச் சக்கரம் கொண்டார்,**
**[28]இருநூற்று நாற்பத்துமூன்று சத்திபீடச் சக்கரம் அடைந்தார்,**
**[29]ஆயிரத்தெட்டுச் சிவாலயச் சக்கரம் உறைந்தார்,**
**[30]பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் கருவூறார்.**

இக்குறிப்பின்படியே பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளில் ஏறத்தாழ அனைத்து அருட்பட்டங்களுக்குரிய முயற்சிகளில் முயற்சியும், முதிர்ச்சியும், தேர்ச்சியும் பெற்றோம் யாம். பிறகு, முயற்சிக்குரிய பதினெட்டாண்டுகளில் இந்த அருட்பட்டங்களை அனுபவத்துக்கு உரியதாக்குவதில் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்றோம். இவற்றிற்குப் பிறகே முறையாக இல்லறமேற்று

அருட்பணி விரிவாக்கத் திட்டங்கள் மூலம் அருளாட்சிக்கு அடிகோலுகிறோம். இருந்தும் ... இன்றைய நிலையில் செயல்தேக்க நிலைகள் உருவாகியுள்ளன. உணர்ந்தும், உணர்த்தியும், பொறுமையுடன் பொறுப்பாகச் செயல்படுவோமாக!

31/12/1982.

**(ஒப்பம்)**
**[ஞாலகுரு சித்தர் கருவூரார்.]**
**1/1/1983.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சண்முகானந்தன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

## உயிர்நாடிக் கொள்கை

...... மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கி! “சித்தர்நெறித் தத்துவமே உலக அமைதி, நிறைவு, நிம்மதி, ஒற்றுமை, சமத்துவம், சகோதரத் தத்துவம், ஆன்மநேய ஒருமைப்பாடு, ... முதலியவைகளை உருவாக்கும் பேராற்றல் உடைய ஒன்று” என்பதை மெய்ப்பிப்பதே ‘அ.வி.தி.’, ‘இ.ம.இ.’ என்ற இரண்டு அமைப்புக்களுக்குமுரிய உயிர்நாடிக் கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம். .....

**// 8.11.1983இல் குருதேவர் எழுதிய ‘அருட்கணிப்பும் அருட்பட்டமளிப்பு ஆணையும் கூடிய மடலி’ல் இருந்த வாசகங்கள். //**

# மண்ணுக்கும் விண்ணுக்கும் போர்

பதினெண்சித்தர்கள் மண்ணின் ஈசர்களான மனிசர்களைப் பண்படுத்தி, நாகரிகப்படுத்தி, உயர்த்திடக் கணிசமான அளவு விண்ணகத்து விந்தைகளை, விண்ணுயர்ந்த கோபுரங்களால் மண்ணுக்குரியதாக்கினர். அவை, முழுமையான 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்'தை உருவாக்கவில்லை. அதற்காக, மண்ணையும், விண்ணையும் இணைக்கும் முயற்சியைப் போர் நிலையிலும் தொடர்கிறார் ஞாலகுரு என்ற செய்தியினைப் 18-2-1983இல் அருட்சேனை இணைத்தளபதி அறிவிக்கும்

**'போர் அறிவிப்பு வீர உறுதி முழக்க மடல்'**

அனைத்து வகையான வழிபாட்டுக்குமுரிய அனைத்து வகையான உருவ, அருவ, அருவுருவத்தினரும், அருளாற்றல்மிகு மானுடரும் இதை முழுமையாக ஆதரித்து ஒன்றுகூடி ஒற்றுமையுடன் இம்மாபெரும் மண்ணுலக, விண்ணுலகப் போரை நடத்திடுமாறு பணிவோடும், கனிவோடும், துணிவோடும் அருட்சேனை இணைத்தளபதி, வெட்டுடையார்காளி சன்னிதானம் சித்தரடியான் இரா. சண்முகானந்தன் விடுக்கும் வேண்டுகோள். பூசையறைகள் பாசறைகளாகட்டும். போர்! போர்! போர்! அறப் போர்! மறப் போர்!

ஓம் திருச்சிற்றம்பலம்!

அன்பு சித்தரடியான் இரா.சண்முகானந்தன்.

**குறிப்பு:** இன்று முன்னிரவில் ஆதிசத்தி நிலை இராசலட்சுமியும், சாயிகோபாலும் மகன் விஜேத்துடன் நேரில் செம்பியம் திரு.வி.க.நகர் வந்து சென்றனர்.

## அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதான அருட்பட்டத்தைப் பத்திக்கும், சத்திக்கும், சித்திக்கும், முத்திக்கும், நடைமுறை வாழ்வுக்கும் உரியதாக்கும் முயற்சி பயிற்சி பற்றிய அறிக்கை

(1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் உண்மையாகி, வெற்றியாகி, நன்மையாகிப் பயனே நல்குகின்றன என்ற பேருண்மையினை உணர்ந்தும், உணர்த்தியும் செயல்படுங்கள்.

(2) இம்மண்ணுலகம் தோன்றுவதற்கும் முன்பே விண்வெளியில் உள்ள பல உலகங்களில் வாழ்ந்து வரும் பதினெண்சித்தர்கள் ஆராய்ந்தறிந்து வகுத்திட்ட பகுத்தறிவு நிறை விஞ்ஞானமே சித்தர் நெறி எனும் இந்துமதம். இந்த உலகத்தில் முதன்முதல் தண்ணீருக்குள்ளிருந்து வெளிப்பட்ட குமரிக்கண்டத்தில்தான்; பதினெண்சித்தர்கள், விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதர்களைத் தனித்து, பிரித்து, வேறுபடுத்தி பண்பாடும், நாகரீகமும் பெறுமாறு செய்தனர்.

இப்படிப் பதினெண்சித்தர்கள் மனித இனத்தைப் பண்படுத்தி, நாகரீகப்படுத்தி, உயர்வுபடுத்தி உய்வடையச் செய்வதற்குப் பயன்படுத்தியது அண்டப் பெருவெளியில் கணக்கற்ற கோடி ஆண்டுகள் வளர்க்கப்பட்ட சமுதாய அரசியல் விஞ்ஞானமான (Social and Political Science) இந்து மதமே ஆகும். இந்த இந்து மதத்தின் அனைத்துச் சாத்திற, தோத்திற, எந்திற, மந்திறக் கலைகளும், அறிவியல்களும், தத்துவங்களும் வெளியிடப்பட்டது பதினெண் சித்தர்களின் தாய்மொழியான தமிழிலேயே ஆகும்.

(3) இந்துமதத்தில் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் நாற்பத்தெட்டுப் பேர் தோன்றி, வளர்ந்து, நிறைந்து செயல்படுவதோடு இம்மண்ணுலகப் பயிரின, உயிரின வாழ்வியல் வரலாறு நிறைவு பெறுகிறது என்று மிகத் தெளிவாகக் குறித்திருக்கிருர்கள். அத்துடன் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் பதினெட்டாண்டுகள் செய்ய வேண்டிய பயிற்சிகளேயும்; பதினெட்டாண்டுகள் செய்ய வேண்டிய முயற்சிகளேயும் மிகமிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் வரையறுத்துக் கூறியிருக்கிருர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்துடன் இவர்கள் பதினெண்சித்தர் பீடாதிபதிகளாக வரக் கூடியவர்கள் சாதிப்பதற்குரிய, சாதித்தற்கரிய, பெரிய, சீரிய, நேரிய திட்டங்கள் பலவற்றை வகுத்துக் காட்டியிருக்கிருர்கள்.

இன்றைய ஞாலகுரு, ஞானகுரு, இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, மக மீன் உடையார், மிதுன இலக்கணம் உடையார், சிம்ம இராசி உடையார், நல்லிலக்கண மார்புடையார், எட்டாம் பிறப்பு, குருதேவர் அவர்கள் தமது பயிற்சிகளேயும், முயற்சிகளேயும் முறையாக முடித்து நிறைவு செய்து இல்லறம் ஏற்கும் முன்னரே பாசவத அத்திறம் (பாசுபத அத்திறம்), பிறம்ம அத்திறம், நாக அத்திறம், விண் அத்திறம், வளி அத்திறம், நெருப்பு அத்திறம், நீர் அத்திறம், மண் அத்திறம், மணல் அத்திறம், உயிர் அத்திறம், ஆவி அத்திறம், ஆன்மா அத்திறம், பயிர் அத்திறம் ... முதலிய பல அத்திறங்களேப் (சிலவற்றை வெளியில் கூறக்கூடாது என்பதனுல் மறைத்து விடுக்கப் பட்டுள்ளன.) பெற்றும், அரசயோகத்தைச் செய்து முடித்தும்; பிறம்மயோகிகள் வரை முறையாக எல்லா வகையான யோகிகளேயும், முனிவர்களேயும், இருடிகளேயும், தவசிகளேயும், மறையோர்களேயும், முறையோர்களேயும், நெறியோர்களேயும், வேதத்தோர்களேயும், கணங்களேயும், கணபாடிகளேயும் ... உருவாக்கி அருளே அனுபவப் பொருளாக வழங்குவதில் மிகப் பெரிய சாதனேகளேச் சாதித்துள்ளார்.

இவரது கடலோடி, காடோடி, நாடோடி வாழ்க்கைகளும்; சுடுகாட்டு, இடுகாட்டு, புதைகாட்டு, நன்காட்டு, நடுக்காட்டு, மலைமுகட்டுப் பூசைகளும், தவங்களும்; நூறுயிரக்கணக்கான சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் சாதி, மத, மொழி, இன, நாட்டு வேறுபாடின்றி உருவாக்கித் தந்திருக்கின்றன. எனவேதான் இவர் உலகம் தழுவிய 'ஆன்மநேய ஒருமைப்பாட்டு'க்குரிய, 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்'திற்குரிய; உலக அருளாட்சியை உருவாக்கும் முயற்சியினைத் துவக்கியிருக்கிறார்.

இதற்காகக் காலத்தையும், இயற்கையையும் வென்று வாழும் பெரிய மகான்களும், ஞானிகளும், முனிவர்களும், இருடிகளும், தவசிகளும் தங்களுடைய முழுமையான ஒத்துழைப்பையும், ஆதரவையும், உதவியையும் நல்கி வருகிறார்கள். ஆனால் இவற்றிற்கெல்லாம் மேலாக அண்டபேரண்டங்களில் இருந்து சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் பெற்று அருளாட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபடும் நாட்டம் கொண்டே செயல்பட்டிட்டார் குருதேவர்.

(4) நண்பர்களே! 14-12-1982 செவ்வாய்க்கிழமை பகலில் சென்னை அம்பத்தூர் விநாயகபுரத்தில் குருதேவர் தாம் அமைத்துள்ள ஆதிசத்திகள் கோட்ட சித்தரடியான், சென்னை நகர அருளாட்சி அமைக்கும் முயற்சிப் பெறுப்பாளர், அருள்மிகு இராமகிருட்டிண பரமஅம்சர் சன்னிதானம், தேவி பவதாரிணி பீடம், இராமானுஞ்சாச்சாரியார் ஆதீனம் சு. சாயிகோபால் இருப்பிடத்தில் பிற்பகல் இரண்டு மணி முதல் ஆறு மணி வரை அண்டபேரண்ட ஆதிசத்திகளின் பூசையை முதல்கட்டமாகச் செய்து முடித்தார்.

இரண்டாவது கட்டமாக 21-12-1982 செவ்வாய்க்கிழமை இரவு 11 மணி முதல் 1½ மணி முடிய 'அண்ட பேரண்ட ஆதிசத்திகளின் பூசை'களைச் செய்து முடித்தார் குருதேவர். ஆனால் 30-12-1982இல்

இனிதாக நடந்து முடிந்திருக்க வேண்டிய அண்டபேரண்ட ஆதிசத்திகளின் மூன்றுவது கட்டப் பூசை பல்வேறு காரணங்களால் சற்றும் எதிர்பாராமல் தடைப்பட்டது. அதாவது 28-12-1982 செவ்வாய்க்கிழமை இரவே முறையாக நிகழ்ந்து முடிந்திருக்க வேண்டிய மூன்றுவது கட்டப் பூசை மானுட இனத்திற்கு மிகப் பெரிய இழப்பு என்ற வண்ணம் தடைப்பட்டு விட்டது.

அதற்காகவே சந்திர கிரகணம் உள்ள 30-12-1982 வியாழக்கிழமை இரவு அருள்மிகு தேவி வீரபாண்டி கௌமாரியம்மன் சன்னிதானம், ஆதிசங்கராச்சாரியார் ஆதீனம், அறுபத்து நான்கு நாயனுர் பீடம், சித்தரடியான் மல்லபுரம் ச. பெரியசாமி செட்டியார் மகன் பெ. சுப்பையா அவர்களின் குடும்பத்தையும்; அருள்மிகு திரிசிரபுரம் உச்சிப் பிள்ளையார் பீடாதிபதி, தேவி கருமாரியம்மன் ஆதீனம், திருப்போரூர் முருகன் சன்னிதானம், திருப்போரூர் சடாமுனீசுவரர் அமளிகை, திருப்போரூர் தவமுனிசுவரர் திருவோலக்க நாயகம், கரூர் நாட்ராயர் இருக்கை, மதுரை வீரன் திருவடி சித்தரடியான் து. சுப்பிரமணியையும்; அவரது துணைவியார் அருட்செல்வி வாலைபரமேசுவரி சன்னிதானம், சோட்டானிக்கரை பகவதி பீடம், காசி விசாலாட்சி சன்னிதானம், கபாலீசுவரர் ஆதீனம் சித்தரடியாள் எழிலரசியையும்; உருவ, அருவ, அருவுருவ நிலைகளில் பயன்படுத்தி மூன்றுவது கட்ட அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானப் பூசை நிறைவு செய்யப்பட்டது.

இச்சாதனை கடந்த ஐநூறு கோடி ஆண்டுகளில் இம்மண்ணுலகில் சாதிக்கப்படாத, புதிய, புரட்சிகரமான, அரிய, பெரிய, சீரிய, பயன்மிகு சாதனையாகும். இச்சாதனையால் மானுட இனத்தின் விழிச்சி நிலைகளும், எழுச்சி நிலைகளும் எப்பொழுதும் செழுச்சி நிலையிலேயே இருக்கச் செய்திடும் வாய்ப்பு வசதிகள் நிறைய உருவாகியிருக்கின்றன. எனவே ஞாலகுருவின் இம்மாபெரும் வெற்றியில் அனைத்து

அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் உரிமையும், பெருமையும் பாராட்டிடலாம், கொண்டாடிடலாம், பங்கு பெற்றதாக நம்பிடலாம்.

அதாவது, குருதேவர் இப்போது பெற்றுள்ள ‘அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்’ என்ற அருட்பட்டத்தின் மூலம் நமது அடியான்களும், அடியாள்களும், அடியார்களும், ஆர்வலர்களும், ஆதரவாளர்களும், விருப்பாளர்களும், நம்பிக்கையாளர்களும் அருள் வளத்தை, வலிமையை, பொலிவைப் பெற்றவர்களாகிறார்கள். எனவே, நமது ‘அருட்பணி விரிவாக்கத் திட்டம்’ இப்பொழுது விரிந்தும், விரைந்தும் நன்மை செய்யும் பெருமைக்குரிய பயன்மிகு நிலையை அடைந்திருக்கிறது. இதனை உணர்ந்தும், உணர்த்தியும் நம்மவர்கள் செயல்பட்டாக வேண்டும்.

(5) 25-12-1982 மாலையில் சித்தரடியான் சு. சாயிகோபால் அவர்கள் தொகுத்த உலகியல் இயலாமைகள், தயக்கங்கள், மயக்கங்கள், கலக்கங்கள் பற்றிய செய்திகளின் அடிப்படையில் குருதேவர், ஞாலகுரு, ஞானகுரு, அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரார் அவர்கள் முன்னிரவு நேரத்திலேயே, தேவையான தற்காப்பு முயற்சிகளை மிகமிகப் பெரிய அளவில், விரிந்த அளவில் செய்து முடித்தார்கள்.

அதாவது ஐயாவின் அருகிலேயே இருக்கக்கூடிய அருள்மிகு அருட்சேனை இணைத்தளபதி, பாண்டியப் பெருமண்டல அருளாட்சி நிர்வாக ஆணையாளர், பாண்டியப் பெருமண்டலக் குருவாணை ஓலைநாயகம், சிவகெங்கை வெட்டுடையார்காளி சன்னிதானம், சிவகெங்கைக் காளையார் கோயில் ஆதீனம், ஞானக்காட்சி வழங்கு நாயகம், அருளாட்சி ஓலைநாயகம், சித்தர் நெறிக்குரவர், சித்தரடியான் சண்முகானந்தன் அவர்கள் குருதேவரின் தலையிலிருந்த திருமுடிகளை

அத்திறங்களாகப் பெற்றிட்டார். அன்று 11-1½ உலகம் முழுதும் கலச பூசை செய்யும் நேரத்தில் இந்த அத்திறங்களை இவரும்; அருள்மிகு திருநெல்வேலி காந்திமதி அம்மன் சன்னிதானம், நெல்லையப்பர் ஆதீனம், ஞானத்தரு, பட்டோலை நாயகம், ஞானக்காட்சி வழங்கு நாயகம், அருளாட்சி ஓலைநாயகம், சித்தர் நெறிக்குரவர், சமயக்குரவர் சாழல் சித்தரடியான் த. பொன்னுசாமியும்; அருள்மிகு தேவி சௌடாம்பிகை அம்மன் சன்னிதானம், திரிசிரபுரம் தாயுமானவர் இருக்கை, ஞானக்காட்சி வழங்கு நாயகம், அருளாட்சி ஓலைநாயகம், அருட்பணி விரிவாக்கச் சேரமண்டல நாயகம், ஆதிசங்கராச்சாரியார் சன்னிதானம் இரா.செ. வேங்கட்ரமணனும் பயன்படுத்தி 192 நாட்களுக்குரிய தற்காப்புத் தடையரண்களை உருவாக்கினர்கள். இதன் தொடர்ச்சியாக மறுநாள் 26-12-1982 ஞாயிறு காலையில் மூவருமே (பொன்னேரியில்) குருதேவரின் தலைமுடியைப் பெற்று மீண்டும் அத்திறங்களை ஓச்சி நிலையான தற்காப்புப் பணிகளை நிறைவு செய்தார்கள்.

(6) மேற்படி 192 நாட்களுக்குரிய தடை அரண்களின் வலிமை முழுமை பெறும் பொருட்டு, நமது தலைமைச் செயலகமான காரியேந்தல்பட்டியில் (மதுரை மாவட்ட மேலூர் வட்ட கொட்டாம்பட்டி அருகில் உள்ளது.) உள்ள அருள்மலையின் மீது அருள்மழை, திருமந்திற ஓலைநாயகம், பதினெண்சித்தர் சிவசத்தி பீடம், ஆத்தாள் வீரமாகாளி சன்னிதானம் நெ. சேவுகன் அவர்களையும்; அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் பெரி. முத்தையா அவர்களையும்; அவருக்குத் துணையாக உருவாக்கப்பட்ட எட்டுத் தாயுமானவர் சன்னிதானங்களையும்; முக்கோண அருட்கோட்டத்தாராகிய (மதுரையிலுள்ள) ஆலவாய் கொற்றவை சன்னிதானம் இரா. தனசேகரன், தேவி மாங்காடு காமாட்சியம்மன் சன்னிதானம் து. சீனிவாசன், பதினாறு திருக்கரம் கொண்டருளு தேவி ஆத்தாள் அகோர வீரபத்திரகாளி சன்னிதானம் இரா. சுப்புராயலு ஆகிய மூவரையும்; திருச்சி மாவட்டத்திலுள்ள

முசிறி வட்டக் குலக்குடி கிராம சித்தரடியான் ஈசுவரர் பிச்சாண்டவர் சன்னிதானம் கு.ம. கணேசன், வீரப்போர் பெரியகாண்டியம்மன் சன்னிதானம் ச. கந்தசாமி, தொட்டியம் மதுரைக்காளி சன்னிதானம் பெ. சௌந்தரராசன், திருச்சிவாழ் சித்தரடியார் அருள்மிகு ஆத்தாள் முப்புரம் கொண்டருளு தேவி ஆதிபராசத்தி ஆதீனம் சோ. இரவீந்திரன், காரைக்குடி வாழ் சித்தரடியான் சிங்கம்புணரி சேவுகப்பெருமால் சன்னிதானம் மு. இராமானுசதாசு முதலியோர்களையெல்லாம் பயன்படுத்தி 192 நாட்களுக்கும் தற்காப்புப் போர் யாகங்களையும், அருள் வழங்கு அருட்பணி யாகங்களையும் தொடர்ந்து செய்யுமாறு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கின்றது ஞாலகுருவால்.

(7) 28-12-1982இல் நிறைவு பெறுமல் போன அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானப் பருவ பூசை, உலகெங்கும் உள்ள அருளாளர்களின் ஒத்துழைப்போடு மிகப் பெரிய அறிவிப்புகளைச் செய்து 29, 30, 31-12-1982 ஆகிய மூன்று நாட்களிலும் பகலிரவாக, ஞாலகுருவால் பெ. சுப்பையா, து. சுப்பிரமணி, த. பொன்னுசாமி, அருள்மிகு ஆதிசங்கராச்சாரியார் பீடாதிபதி, தேவி பவானி அம்மன் சன்னிதானம், தேவி காஞ்சி காமாட்சி அம்மன் சன்னிதானம், பல்லவப் பெருமண்டல அருளாட்சி நிர்வாக ஆணையாளர், சித்தரடியான் சு. நந்தகுமார், இரா. சண்முகானந்தன் முதலியவர்களின் துணையோடு; குருவாணை ஓலைநாயகம், அங்காள பரமேசுவரி சன்னிதானம் (உத்திரமேரூர்) சி. கவிக்குமார் அவர்களின் முழுமையான அருளுலகப் பாதுகாப்பின் கீழ் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானப் பூசைகள் நிறைவு செய்யப்பட்டன.

**குறிப்பு**:- 30-12-1982 இரவு குருதேவர் திருவல்லிக்கேணி கடற்கரையில் செய்த பூசைகள் முழுமையான வெற்றியை அடைந்தன. பூசையின் ஆரம்பத்தில் தோன்றிய மணிமேகலா தெய்வம், ‘இப்பலாசு’

எனப்படும் கொப்பனூங்கோட்டை முனீசுவரர், தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர் முதலாகப் பல முனீசுவரர்கள், சிவாலயச் சிவன்கள், சத்திபீடச் சத்திகள், திருப்பதி உறை கடவுள்கள் எனப்படும் அனைவரும் பூசையின் இறுதியில் குருதேவரின் வெற்றியை ஏற்றுக் கொண்டனர். உடனிருந்த சுப்பையா, சுப்பிரமணி, நந்தகுமார், பொன்னுசாமி முதலியோர் காண கடலில் இரண்டு மூன்று மனித அளவு நீளமுள்ள (10 முதல் 18 அடி நீளம்) அலை பொங்கி வந்து குருதேவரை வணங்கிற்று. அது போழ்து விண்ணிலிருந்த அனைத்து வகையான உருவ, அருவ, அருவுருவத் தாத்தாக்களும், ஆத்தாக்களும் வாழ்த்துதலை வழங்கினர்கள். இது மனித இனம் பெற்ற மாபெரும் சீரிய, சிறப்பு மிகு வெற்றியாகும், நன்மையாகும். இவற்றை உணர்ந்தும், உணர்த்தியும் செயல்படுக!

(8) ஞாலகுருவின் புதிய அருட்பட்டத்தின் மூலம் கிடைத்திருக்கும் எல்லையற்ற பேராற்றல் மிக்க சத்திகளை, அனைவரும் ஆபத்துக்கள் இல்லாமல் துய்த்து மகிழ்வதற்கு உரிய திட்டங்கள் ஆராயப்பட்டு வந்தன. இதற்கிடையில் 4-2-1983 வெள்ளிக்கிழமை இரவு, செம்பியத்திலுள்ள (பெரம்பூர், திரு.வி.க. நகர் வட்டாரம்) குருதேவரின் புதிய இல்லத்தில் சுப்பையா, சுப்பிரமணி, சண்முகானந்தன், பொன்னுசாமி, நந்தகுமார் முதலியோர் [அருள்மிகு சூரப்பட்டு (செங்குன்றம்) கருமாரியம்மன் சன்னிதானம், அரசியலுக்குரிய புகை வழங்கு யாக குண்டங்களைக் காத்து வருகின்ற ந. சண்முகம் அவர்கள் பூசைகளையும், போர்ப் பயிற்சிகளையும் முடித்துச் சென்ற பிறகு] நள்ளிரவு வரை உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அண்டபேரண்டத்துக்குரிய கபாலீசுவரி ஆயாள், சுமார் ஒரு பனை மர உயரம் உள்ளவர்கள்; வட்ட முகம், குட்டை மூக்கு, சிறிய கண்கள், மதுரை, இராமநாதபுரத்துக்காரர்களைப் போல நீண்ட காதுகள் [தண்டொட்டி போட்டவை], நரைத்த முடியும், வெளிறிய கருப்பு முடியும் உடைய முதிய தோற்றம் [அரச மிடுக்கு, எடுப்பு,

ஆட்சித் தோற்றம் ... முதலிய குறிப்பிடத் தக்க தோற்றமுடையவர்] வந்தார்கள். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் கூடவே வந்திருந்தார்கள். ஞாலகுருவுடன் ஒரு சாம நேரம் நிகழ்ந்து முடிந்த உரையாடலுக்குப் பின் அவர்கள் சென்று விட்டார்கள்.

உடனேயே குருதேவர், 'ஞாலகுரு', 'ஞானகுரு' கீழ்க்கண்ட அவசர அவசிய தற்காப்புத் திட்ட ஆணையையும், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் என்ற அருட்பட்டத்திற்குரிய பயிற்சிக்குரிய முயற்சிகளைச் செயலாக்கிடும் திட்டத்தையும் விரைந்து உருவாக்கி வெளியிட்டு இருக்கிறார். அனைவரும் பொறுப்புடனும், பொறுமையுடனும், கூர்மையுடனும், நேர்மையுடனும், ஆர்வத்துடனும் விழிச்சி நிலையில் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(9) இ.ம.இ. ஆர்வமும், ஆற்றலும் ஊற்றெடுக்கும் மாவீரர்களின் பாசறை என்பதனை நம்பியே நமது குருதேவர் நொடிக்குப் பல நூறாயிரக்கணக்கான மைல் வேகத்தில் அண்டப் பெருவெளியில் பயணப்பட்டு, அண்டபேரண்ட ஆதிசத்திகளின் அருளாற்றலை மண்ணுக்குக் கொண்டு வந்துள்ளார். அவர் இம்மாபெரும் முயற்சிக்கு எந்த வித முன்னறிவிப்போ, தயாரிப்போ இல்லாமல், யாருமே எதிர்பார்க்காமல் ஏட்டுச் சுரைக்காயாக இருந்த இம்மாபெரும் அருளுலகப் பட்டத்தைச் செயலுக்குரியதாக ஆக்கிவிட்டார்.

இன்னும் சொல்லப்போனால் அவர் கிராமப்புறத்திலுள்ள "ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் போதும்." என்ற பழமொழிப்படி பதினெண்சித்தர்கள் கூறிய எல்லாவிதச் சாதனங்களும், வசதி வாய்ப்புக்களும், ஏந்துகளும் [உதவிகளும்], துணைகளும் முழுமையாகக் கிடைக்காமலேயே அண்டபேரண்டச் சுற்றுப்பயணத்தைத் துவக்கி, மூன்றில் இரண்டு பங்கு மாபெரும் வெற்றியினை நிலைநாட்டி

விட்டார். இம்மண்ணுலகில், ... "குறிப்பாகத் தமிழினத்தில், நல்லவர்கள் நினைப்பவை நடப்பதில்லை; எத்தகைய வல்லவர்கள் ஆனாலும் நம்பிக்கைக்குரிய துணைகளும், இணைகளும், தோழமைகளும், ஊன்றுகளும், ஏந்துகளும், ஆதரவுகளும் கடைசி வரை கிடைக்காத காரணத்தினால் தள்ளாடித் தடுமாறி, தயங்கி, மயங்கித் தம் முயற்சிக்கே இறையாகி விடுகின்றனர் ..." என்ற வழக்கமான பாரம்பரியப் பழிநிலை, நமது குருதேவருக்கும் வந்திட்டது என்பதால்தான்; இன்றைக்கு அண்டபேரண்ட ஆதிசத்திகளின் பிரதிநிதியாக ஆயாள் தேவி அண்டபேரண்ட கபாலீசுவரி நேரில் வந்து குருதேவர் பெற்ற மாபெரும் வெற்றியைத் திருப்பித் தர வேண்டும் என்ற **'அச்சுறுத்தல் தூதுநிலை'** உருவாகிவிட்டது. கையில் கிடைத்த வெற்றியை அவ்வளவு சுலபமாகத் திருப்பிக் கொடுத்து விடுகிற அப்பாவி நிலையிலோ, கோழை நிலையிலோ, துணையற்ற நிலையிலோ நமது குருதேவர் இல்லை! இல்லை! இல்லை! இல்லவேயில்லை!

நமது அருட்சேனைத் தளபதி, அருள்மிகு முப்பத்தாறு திருக்கரம் கொண்டருளு தேவி ஆத்தாள் வெல்போர்க் கொற்றவை சன்னிதானம், இறைச்சிக்காளி திருவடி, திருமுட்டம் பிறம்ம இராக்கதர் அமளிகை, சித்தரடியான், சித்தரடியார் கு. இரவிமணி அவர்கள் வடஇந்தியாவிலிருக்கின்ற காரணத்தினால், அருட்சேனையின் இணைத் தளபதியாகிய இரா. சண்முகானந்தனாகிய நான், நமது இயக்கத்திலுள்ள நூறுயிரக்கணக்கான அருளாளர்கள், குருதேவருக்காக எத்தகைய பெரிய தியாகத்தையும் செய்து, வீர தீரமாகத் தற்காப்புப் போரில் ஈடுபடுவார்கள் என்ற உறுதிமொழியை வழங்கியிருக்கிறேன். இந்த நெடிய அறிக்கையையே அனைவருக்கும் ஆணையாக அனுப்புகின்றேன்.

நமது அருளுலகச் சாதனைகளால்தான், பொருளுலகச் சிக்கல்களை வெல்ல முடியும் என்பதை யாரும் மறக்க வேண்டாம். அனைவரும் விழிச்சி பெறுங்கள்! கிளர்ச்சி பெறுங்கள்! எழுச்சி பெறுங்கள்!

அன்றுடம் நள்ளிரவில் அவரவர் செய்யும் கலச பூசையில், நமது குருதேவருக்கு ஆதரவாக ஒவ்வொருவரும் இருக்கிறோம் என்பதை உறுதிமொழியாக வழங்க வேண்டும். அதாவது அனைத்துத் தாத்தாக்களிடமும், ஆத்தாக்களிடமும், குருதேவரின் வெற்றிக்காக, பாதுகாப்புக்காகத் தங்களையே யாகத்தீயின் படையலாக, பலிபொருளாக, அவிர்ப்பலியாக, ஆகுதியாகத் தருவதாக முழு மனநிறைவோடு கூறவேண்டும்.

இப்படிக் கூறிப் பூசை செய்ய முடியாதவர்கள் யாரேனும் சிலர் நம்மிடையே இருக்கலாம். இவர்களெல்லாம் கூச்சமோ, அச்சமோ இன்றிச் சிவபுராணம் பாடிக் குருதேவரின் வெற்றிக்காக வழிபாடு செய்து கொண்டால் போதும். நமது குருதேவர் யாரையுமே தமக்குத் துரோகம் செய்துவிட்டதாகவோ, விரோதம் செய்துவிட்டதாகவோ நினைப்பதே இல்லை. அதனால்தான், அவர் அருளுலகிலும், பொருளுலகிலும் தனிமனித நிலையில் எவ்வித எதிர்ப்புமின்றித் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார். எனவே, குருதேவரின் ஆணைகளில் எதனைச் செயலாக்கத் தயங்கினாலும் அது குற்றமில்லை, குறையில்லை. ஆனால், ஒவ்வொருவரும் அவரவரது நிலைகளை அடிக்கடி முழுமையாக, உண்மையாக விளக்கி அறிக்கை செய்து கொள்ளுவது நல்லது. அப்பொழுதுதான் குருதேவர் தனிமனிதர்களின் வாங்கும் தரமும், தாங்கும் திறமும் தெரிந்து அருள் வழங்கவும், ஆணைகள் வழங்கவும் முடியும். உணர்க!

(10) நண்பர்களே! இன்றைய உலகியலில் மதங்கள் கூறும் கடவுள்கள் இருக்கின்றனவா? புராண, இதிகாசங்களால் நன்மை உண்டா? மதவாதிகளாக வாழ்வதில் ஈட்டமுண்டா? ... என்ற வினாக்களை எழுப்பிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற மக்கள் மிகுந்திருக்கிறார்கள். இவர்களுக்கிடையில், "மதம்தான் விலங்குகளோடு வாழ்ந்த மனிதனைத் தனித்துப் பிரித்து வளர்த்து உயர்த்திற்று"

என்ற பேருண்மையினையும்; "புராண இதிகாசக் கதைகள்தான் இனிப்புத் தடவப்பட்ட கசப்பான மருந்துகளைக் குழந்தைகள் உண்ணுவது போல; மனிதர்கள் மிகமிகக் கடினமான தத்துவங்களையும், அதன் கடுமை தெரியாது செயலாக்கும்படி செய்கின்றன" என்ற பேருண்மையினையும்; "மதங்கள் கூறுகின்ற கடவுள்கள் மட்டுமின்றி எண்ணற்ற வகையான #கடவுள்கள் (#அனைத்து வழிபாட்டுக்குரிய தெய்வங்களையும் குறிக்கும் பொதுச்சொல் இது.) இருந்தார்கள், இருக்கிறார்கள், இனிமேலும் தோன்றி இருப்பார்கள்" என்ற பேருண்மையினையும்; "மனிதர்கள் முறையான பயிற்சிகளாலும், முயற்சிகளாலும், நிறைவான முயற்சிகளாலும், குருவருளாலும், திருவருளாலும் கடவுளாகவே மாறலாம்" என்ற பேருண்மையினையும்; ..... மிகத் தெளிவாக விளக்கியுரைத்துச் செயல்படுபவரே நமது குருதேவர்.

இவர்தான், அருளுலகிலேயே முதன்முதல், "எவர் வேண்டுமானாலும், எந்த மதப் பேருண்மையினையும் அநுபவப் பூர்வமாக அறிந்து கொள்ளலாம்" என அறிவித்து; அதற்குரிய எல்லா வாய்ப்பு வசதிகளையும் வழங்குகின்ற கொடை வள்ளலாகத் திகழுகின்றார். எனவேதான், மண்ணுலகத்து மணல்களையும், வானத்து விண்மீன்களையும் எண்ணி முடித்தால் கூட இவருடைய சாதனைகளுக்குச் சான்றுகளாகவும், ஊன்றுகளாகவும் இருக்கின்ற பயிரினங்களையும், உயிரினங்களையும், கிராமங்களையும், மலைகளையும், கடல்களையும், ஊர்களையும், காடுகளையும், குகைகளையும், அருள்வழங்கும் அருட்பட்டங்கள் பெற்ற அடியான்களையும், அடியாள்களையும், அடியார்களையும் ... எண்ணிட முடியாது! முடியாது!! முடியவே முடியாது!!! - என்ற பெரியநிலை நிலையாக இருக்கிறது.

மேலும், எண்ணற்ற கோடி ஆண்டுகளாகச் சித்தர்களின் விந்துவழி வாரிசுகளன்றி மற்றவர்கள் தெரிந்துகொள்ள முடியாதவையாக இருந்த

மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள், சித்தங்கள், நாதங்கள், போதங்கள், போகங்கள், யோகங்கள், தவங்கள், ஞானங்கள், சாத்திறங்கள், தோத்திறங்கள், சூத்திறங்கள், நிடதங்கள், துணை நிடதங்கள், இணை நிடதங்கள், காயந்திரி மந்திறங்கள், பிறணவ மந்திறங்கள், @பிருமணங்கள் (@பிறமாணங்கள் என்ற பாட வேறுபாடு உண்டு), கருவாக்குகள், கருவாசகங்கள், குருவாக்குகள், குருவாசகங்கள், திருவாக்குகள், திருவாசகங்கள், அருள்வாக்குகள், அருள்வாசகங்கள், மருள்வாக்குகள், மருள்வாசகங்கள், சக்கரங்கள், எந்திறங்கள், அத்திறங்கள்... முதலிய எண்ணற்ற பலவற்றை நமது குருதேவர் இராசிவட்ட நிறைவுடையாராகத் தோன்றியும்; பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகப் பொறுப்பேற்றும்; மானுடர் எவரும் செயலாக்கிடாத அரசயோகத்தைச் செயலாக்கியுமே மனம் திறந்து தம்மிடம் வருகின்ற அனைவருக்கும் வாரி வாரி வழங்குகின்றார்.

அதாவது, "<u>மனிதர்களாகப் பிறந்தவர்களுக்கு எதையும் கற்றுக்கொள்ளத் தடைகூடாது</u>" என்ற <u>கருத்தே நமது குருதேவரின் கொள்கையும் குறிக்கோளும் ஆகும்</u>. இப்படிப்பட்ட நமது குருதேவர்தான் இன்றைக்கு, தான் துவங்கியிருக்கும் அருட்போரில் யாருக்கும் பாதிப்பு வந்துவிடக் கூடாது என்று கருதிக் கீழ்க்கண்ட பாதுகாப்புத் திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்.

அதாவது ஒவ்வொருவரும் வெள்ளிக்கிழமை பகலில் அல்லது மாலையில் வீட்டுத் தலைவரின் கைக்கு ஒரு முழ உயரமுள்ள மண்குடத்தில் மஞ்சள் நீர் நிறையக் கரைத்து வைத்து, நிறைய மாவிலைகள் வைத்து, அதன்மீது தேங்காய் வைத்து, தேங்காய்க்கும், குடத்துக்கும் (ஒவ்வொன்றுக்கும்) மூன்று பட்டை திருநீறு பூசி, குங்குமம் வைத்து, நூலைச் சுற்றி அருளூறு கும்பம் அமைக்க வேண்டும். இதற்கு வசதியுடையவர்கள் குருதிப்பலி கொடுக்கலாம்,

வசதி குறைந்தவர்கள் கடையில் விற்கப்படும் சமைத்த இறைச்சியினை வாங்கி வந்து படைக்க வேண்டும். வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று நாட்களும் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று நேரங்களில் அல்லது இராகு காலத்தில் மட்டும் ஒரு தடவை சாம்பிராணி அல்லது ஊதுவத்திப் புகை காட்டிச் சிவபுராணம் பாடிப் பூசையை முடிக்க வேண்டும். தேங்காயைச் சமையலில் பயன்படுத்த வேண்டும். மஞ்சள் நீரை அருளூறு பூசனைப் பொருளாகப் பருகலாம், நீராடலாம், தேவையான இடங்களில் தெளிக்கலாம். பிறகு மண்குடத்தைக் கழுவிப் பத்திரமாக வைக்க வேண்டும். இதே மண்குடத்தை எத்தனை முறை வேண்டுமானாலும் பூசையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டுத் திட்டத்தினால் விண்ணுக்கும், மண்ணுக்கும் நடைபெறும் போரின் பாதிப்புகள் பெருமளவு தடுக்கப் படுகின்றன. எனவே, அன்பு கூர்ந்து அடுத்த அறிவிப்புத் தரும் வரை இந்த மஞ்சள் நீர்க்குடப் பூசையைத் தொடர்ந்து வெள்ளிக் கிழமை தொடங்கி, திங்கட்கிழமை முடிக்குமாறு குருதேவர் அறிவிக்கின்றார். அதாவது, அருட்போரின் உக்கிரம், கடுமை தணியும் வரை எல்லோருமே இத் தற்காப்பினைச் செய்து கொள்வது நல்லது. உணர்க! உணர்த்துக!

(11) நமது குருதேவர், "குருபாரம்பரியத்தைக் கூறியவர்கள் சித்தந் தெளியார், கேட்பவர்கள் பித்தந் தெளியார்" என்ற கடுமையான சாபக் கட்டுப்பாடுகள் இருந்தும்; 'குருபாரம்பரியம் முழுமையும் கூறினால்தான் பாதிப்பு ஏற்படும்' என்று புதிய பொருள் ஒன்று கண்டுபிடித்துக் குருபாரம்பரியத்தைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து வாயுரையாகவும், எழுத்து மூலமாகவும் உலகுக்கு வழங்கும் அருட்கொடை வள்ளலாகத் திகழுகின்றார்.

மேலும் குறிப்பிட்ட பேருண்மைகளை வெளியிட்டால் “ஆயிரம் காராம்பசுக்களைக் கொன்ற பாவம் வரும்” என்ற சாபங்களையும் கூடப் பொருட்படுத்தாமல் மனித நலச் செழுச்சிக்காக அருட்செல்வங்களைக் கடல் மடை திறந்தது போல் வாரி வழங்குகிறார் நமது குருதேவர். இவர், தமக்குத் தெரிந்தவைகளைத் துணிந்து வெளியிடுவது போல், தமக்குத் தெரியாதவைகளைத் தெரியாதவை என்றும்; புரியாதவைகளைப் புரியாதவை என்றும்; அநுபவம் இல்லாதவைகளை அநுபவம் இல்லாதவை என்றும்; உண்மையான பகுத்தறிவு நிலையிலிருந்து கூறித் தமது ஏட்டறிவையும், பட்டறிவையும் ஓர் ஆராய்ச்சியாகவே செய்து வருகிறார். எனவேதான், இவர், தன் வாழ்வை [THE TEST OF DIVINITY] ‘ஒரு தெய்வீக சோதனை’ என்று பெயரிட்டிருக்கிறார்.

இதன்படி பார்த்தால், இவர் தெய்வங்களைச் சோதிக்கிறாரா? அல்லது தெய்வங்கள் இவரைச் சோதிக்கின்றனவா? என்று இவரைச் சார்ந்த அனைவருமே ஐய வினா எழுப்பிச் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கின்றது. ஏனென்றால், தெய்வீகச் சோதனைகளால்தான் இவர் உடல் நலமும், பிற வாழ்க்கை வசதி வாய்ப்புக்களும் திடீர் திடீரென்று எதிர்பாராத பாதிப்புக்களை அடைகின்றன.

இவர், வெளிப்படையாக உரையாடல்களிலும், சொற்பொழிவுகளிலும், எழுத்துக்களிலும், அச்சிட்ட அறிக்கைகளிலும், நூல்களிலும் தம்மிடம் தமிழக வரலாறு, இந்திய துணைக்கண்ட வரலாறு, இந்த உலகம் தோன்றி வளர்ந்த 500 கோடி ஆண்டு கால வரலாறு, பயிரின, உயிரினத் தோற்ற வளர்ச்சி வரலாறு, இந்த உலகில் தோன்றிய முதல் நிலமான குமரிக் கண்டத்தின் வரலாறு, உலக முதல் மொழியான தமிழ் மொழியின் வரலாறு, மனித சமுதாயத்தின் தோற்ற வளர்ச்சி வரலாறு, உலக அரசியல் தோற்ற வளர்ச்சி வரலாறு, மனித உயிர், ஆவி, ஆன்மா முதலியவற்றின் வரலாறு,

உலக முதலினமான தமிழின வரலாறு, வானவெளி அமைப்புக்களும் இயக்கங்களும் பற்றிய பேருண்மைகள், மானுட வாழ்வு பற்றிய பேருண்மைகள், பதினெண்சித்தர்கள் போற்றி வளர்த்த சித்த மருத்துவக் கலைகள், சித்தர் மருத்துவக் கலைகள், சிற்பக் கலைகள், ஓவியக் கலைகள், கட்டிடக்கலைகள், போர்க்கலைகள், இயந்திர சாத்திறங்கள், வரியியல் [கை ரேகை], பெயரியல், மனையியல், அங்கவியல், எண்ணியல், கனவியல், தொடுகுறியியல், நிமித்த இயல், பிறப்பியல் [சாதகம்], உலோகவியல் ... முதலிய எண்ணற்ற இயல்களுக்குரிய சாத்திறங்கள், தமிழுலகம் அழிந்து விட்டதாகக் கருதும் எண்ணற்ற இலக்கண இலக்கியங்கள் ... முதலியவை தம்மிடம் இருப்பதாக அறிவித்து வருகிறார்.

தமிழினத்திற்கென ஒரு நாடும், அரசும் இருந்தும் கூட இவருடைய அறிவிப்பைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் அச்சிட்டு [தமிழ்]நூல்களுக்கு உலக அறிவுச் செல்வ நிலையை உயர்த்தும் பணி துவக்கப்படவேயில்லை. தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், தமிழினப் பாதுகாப்புக்காகவும் மட்டுமே செயல்படுவதாகக் கூறிக் கொள்ளும் எண்ணற்ற தலைவர்களும், பல சமய சமுதாய அரசியல் கழகங்களும் இருந்தும் கூடத் தமிழினத்தைச் சார்ந்த பெருமைக்குரிய, அரிய சீரிய பேருண்மைகள் அச்சாக முடியவில்லை.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவே செயல்படுவதாகக் கூறிக் கொள்ளும் பல பதிப்பகங்களும், அச்சகங்களும்; "பைந்தமிழில்தான் பதினெண்சித்தர்களால் விண்ணையும், மண்ணையும், பயிரினங்களையும், உயிரினங்களையும் பற்றிய முழுமையான நூல்கள் இருக்கின்றன" - என்ற பேருண்மைகளைச் சான்றுகளோடும், ஊன்றுகளோடும் விளக்கிடும் குருதேவரின் கட்டுரைகள், அஞ்சல்கள், நூல்கள் அச்சாகி அறிமுகமாக உதவிடாமல் இருக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் மேலாக நம்மைப் போல ஆர்வமும், ஆற்றலும் உடைய இளைஞர்கள் எண்ணற்றோர் நமது குருதேவர் ஞாலகுரு சித்தர் கருவூராரைச் சுற்றி இருந்தும் கூட விரிந்தும், விரைந்தும் இவரிடம் உள்ள அறிவுச் செல்வங்களை அச்சாக்கிட முடியவில்லை. ஆனால் என்னென்னவோ புத்தகங்கள் எதையெதைப் பற்றியோ எல்லாம் தொடர்ந்து வெளி வந்து குவிந்து கொண்டிருக்கின்றன ... இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுதுதான் நமது குருதேவர் தம்முடைய வாழ்க்கையைப் பற்றி, "எமது வாழ்க்கை ஒரு தெய்வீக சோதனை" என்று கூறுவது மெய்தான் என்று எண்ணத் தோன்றுகிறது.

இருந்த போதிலும் நமது குருதேவரே தெய்வீக சோதனைகள் தம்மோடு இருக்கட்டும் என்று முடிவெடுத்து மற்ற அனைவருக்கும் எள் முனையளவு கூடச் சோதனைகளோ, வேதனைகளோ வராமல் எச்சரிக்கைகளையும், அறிவிப்புக்களையும் பரிகாரங்களையும் தற்காப்பு முறைகளையும் உடனுக்குடன் அளப்பரிய ஆர்வத்துடனும், அக்கறையுடனும் வழங்கி வருகிறார்.

எனவேதான் அவரின் பின்னால் காடுகளிலும், குகைகளிலும் மலைமுகடுகளிலும் வாழுகின்ற துறவிகளும்; நாடு நகரங்களில் நாகரீக வசதிகளுடன் வாழுகின்ற இல்லறத்தார்களும் ஒரே மாதிரியான பற்றோடும், பாசத்தோடும், பிடிப்போடும், பணிவோடும், கனிவோடும், துணிவோடும், உண்மையான நம்பிக்கையோடும் தொண்டர்களாக வாழுகிறார்கள். இந்த மாபெரும் தொண்டர் படையைக் கொண்டுதான் நமது குருதேவர் தாம் விரும்பும் சமுதாய மாற்றங்கள் அனைத்தையும் செய்யப்போகிறார்.

ஆனால் பழம்பெரும் நாடான இந்தியத் துணைக்கண்டத்தில் எண்ணற்ற பிரிவுகளும், வேறுபாடுகளும், மாறுபாடுகளும், முரண்பாடுகளும், வெறுப்புக்களும், மறுப்புக்களும், எதிர்ப்புக்களும், குறுகிய வெறிகளும் ... காடு போல் வளர்ந்து மண்டிக் கிடக்கின்றன.

இக்காரணத்தினுல் இவ்வுலக இயற்கைக்கு அப்பாற்பட்ட மாபெரும் சத்திகளின் துணையோடுதான் இச்சமுதாய மாற்றப் பணியை நிறைவு செய்யவேண்டும் என்று முடிவெடுத்தார் நமது குருதேவர்.

அதற்காகவே 'ஐந்தீ வேட்டல்', 'முத்தீ ஓம்பல்' என்னும் இரண்டையும் தமது கண்ணெனப் போற்றி வருகிருர். அரசயோகத்துக்குரிய சத்திகள் போதாது என்று விண்வெளியில் பயணப்பட்டு அண்டபேரண்ட ஆதிசத்திகளிடமிருந்து சத்திகளைப் பெற்று 'அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக' ஆகியிருக்கிருர். இம்முயற்சியில் சற்றும் எதிர்பாராமல் ஏற்பட்ட மூன்றில் ஒரு பங்கு நிறைவு செய்யப்படாத பூசைகளை நிறைவு செய்ய இரவு பகலாகப் போராட ஆரம்பித்து விட்டார் நமது குருதேவர். அவரது உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

எனவே நம்மவர்கள் அயர்ச்சியின்றி அன்ருடப் பூசைகளைச் செய்வதோடு தங்கள் தங்களின் வட்டாரங்களிலுள்ள கருவறைகளையெல்லாம் புத்துயிர்ப்புச் செய்யுங்கள். தங்கள் தங்களின் பொருளாதார வசதி வாய்ப்புகளுக்கேற்பச் சத்தி வாய்ந்த கோயில்களுக்குச் சென்று அருட்சினை மந்திரங்களைக் கூறி குருதேவரின் வெற்றிக்குத் தேவையான துணைச் சத்திகளைப் பெற்றுத் தாருங்கள். ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு கட்டு மந்திரத்தைக் கூறிக் குருதேவருக்குத் தேவையான பாதுகாப்புக்களைச் செய்யுங்கள். அடிக்கடி குருதேவரிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

இன்றைய மக்கள் உலகப் போர்களைப் பற்றி ஏட்டில் படிப்பது போல வருங்காலச் சந்ததியார்கள் நாம் நிகழ்த்துகின்ற அண்டப் பெருவெளிப் போரினைப் பற்றிப் படிப்பார்கள். அதாவது, நாம், உண்மையான ஒரு மாபெரும் வரலாருக வளர்ந்து வருகிருேம், என்ற விழிப்புணர்வுடனேயே செயல்பட்டாக வேண்டும். அப்பொழுதுதான் உலகியலால் தளர்ச்சியுற்றுக் கிடக்கும் மக்கள்

தெய்வீகத்தால் தெம்பு பெற்றிட முடியும். கனிசமான அளவு மக்கள் தெம்பினைப் பெற்று ஒன்று திரண்டிட்டால்தான், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கக்கூடிய மக்களைக் கிளர்ச்சி பெற்றெழுந்து சமுதாய மாற்றத்திற்குத் தேவையான வளர்ச்சிகளை முறையான பயிற்சிகளின் மூலமும், நிறைவான முயற்சிகளின் மூலமும் அடையும்படிச் செய்ய முடியும். எனவேதான் நம்மவர்களுடைய விழிச்சி, செழுச்சி, எழுச்சி நிலைகள் குருதேவரால் கண்ணும் கருத்துமாகக் காத்து வளர்க்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட குருதேவரைப் போராட்ட நேரத்தில், போர்க்களத்தில் காத்திட அனைவரும் ஆர்வமுடன், அக்கரையுடன், அயர்ச்சியின்றிப் பாடுபடும்படிக் கேட்டு இவ்வஞ்சலை நிறைவு செய்கிறேன்.

ஓம் திருச்சிற்றம்பலம்

குருவே எல்லாம்! குரு வாழ்க! குருவே துணை!

திருவே குரு! குருவே அனைத்துக்கும் கரு!

**- அன்பு சித்தரடியான் சண்முகானந்தன்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல் சித்தரடியான் திரு சண்முகானந்தன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# செயல்விளக்கத் திருவோலை

குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர், மருத்துவ குடியிருப்பு, தொழிலாளர் நலக்காப்பீட்டு மருத்துவமனை (E.S.I. Dispensary), செம்பியம், பெரம்பூர், சென்னை-11.

25.6.1983இல் அருள்மிகு சித்தரடியான் பெ.சங்கிலியாபிள்ளை, 7-B, பாபுரோடு, திருச்சி-2 அவர்கள் சமூகத்துக்கு விடுக்கும் 'செயல்விளக்கத் திருவோலை'.

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் வெற்றியாகின்றன. திருச்சி மாநகரில் நமது இயக்க வளர்ச்சி மந்தமாக இருந்த நிலையைத் தாயுமானவரும், மட்டுவார்குழலி ஆத்தாளும் மாற்றியுள்ளார்கள் என்பதனை தங்களின் 18.6.83ஆம் நாளைய அஞ்சலும், அதில் அருள்மழை திருமந்திற ஓலைநாயகம் நெ.சேவுகன் எழுதியுள்ள பரிந்துரையும் தெளிவாக்கியுள்ளன.

2) மிக நெடிய இடைவெளிக்குப் பிறகு தாங்கள் நேரில் சென்று வீரமாகாளி சன்னிதானத்தைக் கண்டு வாழ்த்துப் பெற்றதுதான் மிகப்பெரிய சாதனை. உங்களை வாழ்த்துகிறோம், போற்றுகின்றோம். இனியாவது விரைந்தும், விரிந்தும், சுறுசுறுப்போடு அனைவருடனும் அஞ்சல் தொடர்பையாவது கொண்டு செயல்படுங்கள், செயல்படுத்துங்கள்.

3) தாங்கள் இதுகாறும் தொடர்ந்து பூசைகளை தவறாது செய்து வந்தும் கூட, இ.ம.இ. நிலையங்களுடன் தொடர்பு கொள்ளாத காரணத்தால் தங்கள் பணி அணிபெற வில்லை. இயக்கமும் தங்களை சார்ந்து வளரவில்லை. எனவே, பொறுப்போடு காரியேந்தல்பட்டிக்கும், எமக்கும் உங்களின் செயல்நிலைகளை விளக்குங்கள். அதுவே அக

புற வளர்ச்சிகள், குடும்பநிலை வளவளர்ச்சிகள், சமுதாயப் பணிகள் முதலியவை உண்மை பெற்று நன்மை நல்கச் செய்யும்.

4) திருச்சி மாநகருக்குள்ளும், சுற்றுவட்டாரங்களிலும் உள்ளவர்கள் ஒவ்வொரு வாரமும், ஒவ்வோர் அடியானின் இருப்பிடத்தில் கூடிச் செயல்திட்டங்கள், இ.ம.இ. அறிவிப்புக்கள், பூசைநிலைகள் ... முதலியவை பற்றி உரையாட வேண்டும். அவசியம் அனைவரும் கூடுகின்ற இடத்தை ஒரு வாரத்திற்கு முன்பே அறிவித்து; அந்தந்த வட்டார மக்களுக்கு துன்ப நீக்கமும், இன்ப ஆக்கமும், அருளுலக ஊக்கமும், மந்திரவாதி தாக்கு தடுப்பும், நாள்கோள்மீன் பாதிப்பு பரிகாரமும், சித்திகளை விரைவில் பெறச் செய்யக்கூடிய பத்திமுறைகளும், அருட்சித்திகளைப் பெறும் அருட்கலைப் பயிற்சி நெறிகளும், சரியான வாழ்வியலுக்கு உதவும் அருட்கணிப்புகளும் ... வழங்கிடல் வேண்டும்! வழங்கிடல் வேண்டும்!! வழங்கிடல் வேண்டும்!!!

5) இப்படி நகரின் நாலாபக்கமும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தைச் செயலாக்கினால்தான், கோயில்கள் மூலம் அரசியல்வாதிகளும், சமய சமுதாயவாதிகளும் நிகழ்த்தும் கொள்ளைகளிலிருந்தும், தவறுகளிலிருந்தும் மக்களைப் பாதுகாக்க முடியும். மேலும், சோதிடர்கள், குறிகாரரர்கள், மந்திரவாதிகள், ... முதலியோர் மக்களை சுரண்டுவதையும், ஏமாற்றுவதையும் தடுக்க முடியும். ஆரியக் கற்பனைகளும், கருத்துக்களும் உருவாக்கியிருக்கும் தேவையற்றவைகள், பயனற்றவைகள், மடமைகள், மோசடிகள், ... முதலிய அனைத்தையும் அகற்ற முடியும். அப்பொழுதுதான், பதினெண்சித்தர்கள் பல நூறுயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் இளமுறியாக் கண்டத்தில் (The Lost Lemuria = குமரிக்கண்டம்) உருவாக்கிய இந்துமதத் தத்துவமும், சித்தாந்தமும், செயல்நிலையும் தமிழ்மொழியில் உள்ளன என்ற பேருண்மை அநுபவப் பூர்வமாக

அனைவருக்கும் விளங்கிடும். **'இந்துமதம்' என்ற அழகிய தமிழ்ச் சொல்லால்தான் 'இந்தியா' என்ற பெயர் ஏற்பட்டது; 'இந்தியா' என்ற சொல் தமிழிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட ஒன்றேயாகும்.** ஆரியர்கள் கி.மு. இரண்டாயிரத்தில் இந்தியாவிற்கு வருமுன்னரே இந்துமதம் முழுமையான வளர்ச்சி பெற்றிருந்தது. இந்துமதம்தான் முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பு, ஆவி, ஆன்மா, உயிர், கடவுளை அடையும் வழிகள், மனித வாழ்வின் பயன், அண்டம், பேரண்டம், அருளுலக அருள்நிலைகள் முதலிய அனைத்தையும் தமிழ்மொழி மந்திரங்கள் மூலம் செயலாக்கிக் காட்டும் ஆற்றல் உடையது. இது ஒரு பகுத்தறிவு தத்துவம், முறையான விஞ்ஞானம், முழுமையான வாழ்வியல்.

6) இதற்கு எட்டு நகல்கள் உடனே எமக்கு அனுப்புக. தாங்கள் அறிந்த அடியான்களுக்குத் தொடர்ந்து இதன் நகலை அனுப்புங்கள். விழிப்போடு செயல்பட்டு செழிப்படைக.

**குறிப்பு:** காரியேந்தல்பட்டி, மதுரை, சேலம், வேம்படிதாளம் முதலிய இடங்களுக்கு உடனே நகல்களை அனுப்புங்கள்.

**குருமகா சன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்,**

**25.6.1983.**

**//உண்மை நகல்//**

நகல்கள் நல்குபவர்:- அருள்மிகு சித்தரடியான் சீ.மணி, 1/11/85

**//இதன் மூலம்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**

# மத மறுமலர்ச்சி

*{அஞ்சலின் துவக்கப் பகுதி கிடைக்க வில்லை}*

... வேண்டும். இல்லையேல் நம்மையும் மறுக்க, எதிர்க்க, ஒதுக்க, புறக்கணிக்கலாம். எச்சரிக்கை. குருவாணை 10/8/1983.

8) நாம் விரும்புவதெல்லாம் '**பண்பாட்டுப் புரட்சி**' [The Cutural Revolution]. நமக்குத் தேவை அல்லது நமது குறிக்கோள் '**சமுதாயப் புத்தமைப்பு**' [The Social Reformation]. இதற்காக நாம் செய்யப் போவது '**மத மறுமலர்ச்சிதான்**'. [The Religious Renaissance]. இவற்றை நாம் உலகியல் மக்களுக்கு வழங்கப் போவது '**தத்துவ விழிப்புணர்வால்தான்**' [The Philosophy Awareness] ... எனவே, தங்களைப் போன்றவர்கள் 'வாசகர் வட்டம்' அல்லது 'படிப்பகம்' ஆங்காங்கே அமைத்து நமது எழுத்துக் குவியல்களைப் படித்துக் காட்டும் பணியை விரைந்தும், விரிந்தும் செய்தல் வேண்டும்.

9) நம்மவர்கள் வாரம் ஒருநாளாவது இலிங்கம் படம் தைத்த சிவப்புடை (சட்டை, வேட்டி) அணிந்து கொடியேந்திக் கோயில்களுக்குச் செல்ல வேண்டும். குருவாணை 10/8/1983.

10) எங்கு விழா நடந்தாலும்; பூசை நடந்தாலும் நம்மவர்களில் அருட்பட்டம் பெற்றவர்கள் சன்னிதான உடையில்தான் செல்ல வேண்டும். குருவாணை 10/8/1983.

11) 'மகாத்மா காந்தியால்தான் இந்தியா விடுதலை பெற்றது' என்ற கருத்து நிறையப் பேரால் நம்பப்படுகிறது. நாம், உலகியலின்படி இதை ஏற்போம். எனவே, எம் தந்தையின் மகாத்மா காந்தி விமர்சனக் கருத்துக்களை அதிகம் வற்புறுத்த வேண்டாம்.

12) தமிழர்களில் பதவியாசையால் பிறர்க்குத் தொண்டராக, கூலியாக, காவடியாக, கங்காணியாக உழைத்திடத் தயாராக இருப்பவர்கள் **கணிசமான அளவு** இருக்கிறார்கள். எனவே, மிகமிக எச்சரிக்கையோடு, தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழர் பண்பாடு, ... என்ற சொற்களைப் பயன்படுத்தி ... ... ... ... ..*(மூல நகலில் சில வரிகள் கிடைக்கவில்லை)* ... ... ...

'சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைப்பதுதான் நமது கொள்கை... என்ற கொள்கை முழக்கத்தைத் தெளிவாக வலியுறுத்திக் கூறியே செயல்படல் வேண்டும். இல்லாவிட்டால் ஒற்றுமை உருவாகுமுன், செயல் வெல்லுமுன் நாம் தவறான சூழல்களில் நிற்க நேரிடும்.

இந்துமதம் ஆட்சி செய்ய வேண்டும்! எனவே அருளாட்சி என அறிவிப்போம். குருவாணை.

**அன்பு**

**குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**

**10/8/83.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக கிழிந்த, நைந்த தாளாகக் கிடைத்தது. எனவே சில வரிகள் இடையிடையே காணாமல் போய்விட்டன.//**

# விண்ணே மண்ணாகும் !
# மண்ணே விண்ணாகும் !

..... 29, 30, 31-12-82 ஆகிய மூன்று நாட்களும் அண்டப் பெருவெளியில் மாபெரும் சாதனைகள் செய்யப்பட்டன. 30-12-82 கடல்நீர் அற்புதமாகப் பணிந்து வந்து வாழ்த்துரைத்தது. மணிமேகலா தெய்வம், இப்பலாசு எனப்படும் கொப்பணாங் கோட்டை முனீசுவரர், தாத்தா மதுரைப் பாண்டிமுனீசுவரர், பல தாத்தாக்கள் ஆத்தாக்கள் நேரில் தோன்றி வாழ்த்தி அருள் வழங்கினார்கள். அருளாட்சி அமைக்கத் துணை வர உறுதி கூறினார்கள். தஞ்சைத் தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூராரும், கருவூர் தாத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூராரும் எமக்குப் பக்கபலமாக எம்முடனேயே இரு பக்கமும் காத்து அண்டப் பெருவெளியில் பயணம் செய்து மாபெரும் வெற்றிகளை எமக்குத் தேடித் தந்தார்கள். இம்மண்ணுலகம் இதுவரையில் பெற்றிராத அண்டபேரண்ட ஆதிசத்திகளைப் பெற ஆரம்பித்து விட்டது.

இனிமேல் உலகெங்கும் அருளாளர்களை உருவாக்கலாம்; அருட்பயிர் விளைவிக்கலாம்; அருளாட்சி அமைக்கலாம். இதனால் இராசிவட்ட நிறைவுடையார் காலத்தில் ‘விண்ணே மண்ணாகும்’, ‘மண்ணே விண்ணாகும்’, ‘மக்கள் மகேசுவரர் ஆவார்கள்’, ‘அருளாட்சி அமையும்’, ‘மானுட இனம் உய்யும்’, ‘செத்தவர் பிழைத்து உலகத்தாருக்கு ஒத்தார் ஆவர்’, ‘உருவ அருவ அருவுருவங்கள் மனிதர்களோடு உறவு பூண்டு உரிமை காத்து நன்மை செய்யும்’, ‘இயற்கையை வென்று இறைமை எய்துவோர் மிகுவர்’ ... என்ற குருபாரம்பரிய வாசகங்கள் உண்மையாகி விட்டன......

**// 3.1.1983இல் குருதேவர் அவர்கள் சித்தரடியான் திரு.இராசுநாயுடு அவர்களுக்கு எழுதிய அஞ்சலின் 3வது பத்தி. //**

**“அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்”** -- குருபாரம்பரிய வாசகம்.



“... ... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** ஏறத்தாழ (256) இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் வாழ்ந்திட்டார். இவர் ஒன்பது பிற்காலச் சோழர் குல மன்னர்களுக்குக் குலகுருவாகவும்; அரசர் இல்லாக் காலங்களில் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் ஆட்சித் தலைவராகவும் வாழ்ந்திட்டார். தஞ்சைப் பெரிய கோயிலிலும், நாட்டின் பல பகுதிகளிலும் ‘சிறு பள்ளி’, ‘பெரும் பள்ளி’ என்ற கல்விக்கூடங்களை நடத்திப் பல கலைகளையும் முறையாக வளர்த்திட்டார் ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org